1978 மார்ச் 22]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, எவை எவை என்று படிக்க ஆரம்பித்தால் இந்த அவையை விடிய விடிய நடத்த வேண்டியிருக்கும்.

திரு. மு. செல்வராஜ் : இப்போது இருக்கின்ற முறை, உத்தியோக விஷயங்களில் பிற்பட்டோருக்கு 31 சதவிகிதமும், தாழ்த்தப்பட்டோர் இனத்தவரைச் சேர்ந்தவர்களுக்கு 18 சதவீதமும் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. இதை இன்னும் மேற்கொண்டு உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றால் அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும். இப்போது 31 சதவீதம் பிற்பட்டோருக்கு இருப்பதை 35 ஆகவும், தாழ்த்தப்பட்டோருக்கு 18 சதவீதம் என்றிருப்பதை 25 சதவீதம் என்று உயர்த்துவதற்கும், அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்காக மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கின்ற முறையில், இந்தச் சட்டமன்றத்தில் இதற்காக ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்ற அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, சட்டநாதன் அவர்களின் தலைமையில் போடப்பட்ட குழு 33 சதவீதத்தைப் பின்தங்கியோர் பட்டியலில் உள்ளவர்களுக்கு ஒதுக்க வேண்டும் என்று சிபாரிசு செய்திருக்கிறது. அன்றைக்கு இருந்த அரசு இதை 31 சதவீதமாக ஆக்கியது, மேலும் இதில் சட்ட சிக்கல் இருப்பதாலும், சுப்ரீம் கோர்ட் இதை ஆட்சேபித்து இருக்கிற காரணத்தினாலும் இது செயல் படுத்த முடியாமல் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :— ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*)இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) ஒழுங்குப் பிரச்னை.

விசாரணைக் கமிஷன் முன்னுள்ள பொருள் பற்றி முதல்வர் தெரிவித்துள்ள கருத்துக்கள் குறித்து.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பாயிண்ட் ஆப் ஆர்டர், தமிழ்நாடு சட்டமன்ற விதிமுறைகளைப்பற்றிய முக்கியமான ஒரு விஷயத்தைப்பற்றி எழுப்ப விரும்புகிறேன். சென்னை மாநகரத்தில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தைப்பற்றி விசாரிப்பதற்கு ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது. அது

எந்த விதத்தில் பாதிக்கப்பட்டிருக்கிறது என்கின்ற விவரத்திற்குள் நான் போக விரும்பவில்லை. நமது சட்டமன்றத்தில் எதை வேண்டுமானாலும் உறுப்பினர்கள் பேசலாம் என்ற உரிமை நமக்குத் தரப்பட்டிருக்கிறது என்றாலும், அரசியல் சட்டத்தில் 194-ல்— "Subject to the provisions of this Constitution and to the rules and standing orders regulating the procedure of the legislature, there shall be freedom of speech in the Legislature of every State" என்று கூறப்பட்டுள்ளது, சட்டமன்ற விதிமுறைகளுக்கு உட்பட்டுத் தான் பேச வேண்டும் என்றும் இருக்கிறது. எல்லாவற்றையும் நினைத்ததையெல்லாம் பேசிவிட முடியாது. நம்முடைய லெஜிஸ்லேட்டிவ் அசெம்பிளி ரூல்ஸில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், ஒரு விஷயம் விசாரணையில் இருக்கிறது என்றால், அந்த விஷயத்தைப்பற்றி எதை வேண்டுமானாலும் பேசிவிட முடியாது என்று இருக்கிறது..........

Rule 31 (9) says:

"it must not relate to any matter which is under adjudication by any Court of Law or to the conduct of a Judge of the Supreme Court or of a High Court in his judical capacity."

அதேபோல்..........

Rule 59 (vi):

"It shall not relate to any matter which is under adjudication by a Court of Law having Jurisdiction in any part of India."

Rule 67 A member, while speaking must not—

Clause (i) give his opinion about or refer to any matter on which a judicial decision is pending.

Rule 68 (viii): It shall not relate to any matter which is under adjudication by a court of law having jurisdiction in any part of India.

ரூல்ஸ் 143, 156–12 இவைகளிலும் வற்புறுத்திக் கூறப்பட்டுள்ளது. – மேலும்

அசெம்பிளி ரூல்ஸ் 68— கிளாஸ் 5-ல் கமிஷனில் விசாரணையில் இருக்கும் எந்த விஷயத்தைப்பற்றியும் குறிப்பிடக்கூடாது என்று இருக்கிறது. 156 கிளாஸ் 12-லும் இதேதான் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு மாண்புமிகு முதலமைச்சர்

அவர்கள் சில கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அவ் விதம் தெரிவித்த கருத்துக்கள் இந்த விதிமுறைகளுக்கு எந்த விதத்தில் பொருத்தமாக இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டியிருக்கிறது. இதனால் கமிஷனின் நடவடிக்கைகள் எந்த அளவு பாதிக்கும் என்பதைப்பற்றி நான் விவரத்திற்குள் போக விரும்பவில்லை. ஆகவே, முதலமைச்சர் அவர்கள் கூறிய கருத் துக்கள் விதிகளுக்கு முரணாக இருக்கிறது. இது சட்டமன்ற நடைமுறை விதிகளுக்குப் புறம்பாக இருக்கும் என்ற முறை யில், இங்கு சொல்லப்பட்டிருப்பது முறை தானா என்பதைத் தான் நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு திரு. சாதிக் பாட்சா அவர்கள் நீண்டநாள் உறுப்பினர். சட்டமன்ற விதிமுறைகளைப்பற்றியும், இங்கு கூறப்பட்ட சில கருத்துக்கள் பற்றியும், அரசியல் சட்ட விதிகளைப் பற்றியும் விளக்கமாக இவ் விதம் கூறும்போது, இதையெல்லாம் எழுத்து மூலமாக என் னிடம் முன்பு எழுதிக் கொடுத்துவிட்டு இதைப் பற்றி விவாதித்து இருக்கலாம். அப்படி எழுதிக் கொடுக்காமல் இதை எடுத்து ஒழுங்குப் பிரச்னையாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் இவற் றைப் பற்றி பரிசீலனை செய்து தான் பதில் சொல்ல முடியும். ஆகவே, இவற்றையெல்லாம் எழுத்து மூலமாகத் தந்தால் இதைப் பற்றிப் பரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(3) தகவல் கோரல்.

ஆபாசப் படங்கள் வெளியிடுவோர் மீது எடுக்கவிருக்கும் நட வடிக்கை பற்றிய செய்திக் குறிப்பு குறித்து.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, சட்டப்பேரவை நடந்து கொண்டிருக்கும் நேரத்தில் பத்திரிகைகளுக்கெல்லாம் அரசாங்கத்தின் சார்பாக திடீரென்று ஓர் உத்தரவு சென் றிருப்பதாக ஏடுகளில் செய்தியைப் பார்த்தேன். வானொலி யிலும் இச்செய்தி ஒலிபரப்பப்பட்டது. ஆபாசமான படங்களை வெளியிட்டால் பத்திரிகை ஆசிரியர்கள் உடனடியாகக் கைது செய்யப்படுவார்கள் என்று அந்த செய்திக் குறிப்பில் வெளி யிடப்பட்டிருக்கிறது. ஆபாசம் என்று எதை அளவிட்டு அறி விக்கப்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. ஆபாசப் படங்கள், ஆபாசச் சித்திரங்கள் இவைகளைப்பற்றி ஏற்கனவே அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில், இது பற்றி இந்த அவையிலும் மேலவையிலும் குறிப்பிடுகின்ற நேரத் தில், "இது அவரவர்களின் மன நிலையைப் பொறுத்தது என்றும், எந்த அளவுக்கு என்று அளவிட்டுக் கூற இயலாது" என்று அண்ணா அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.